**பஸ்கொட பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பஸ்கொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பஸ்கொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளின் போது செயற்படுத்தப்பட்டிருக்காத ரூபா 205,000 தொகை பெறுமதியான 05 நிர்மாண வேலைகள் கடன் கொடுத்தோர் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஒரு நிர்மாண வேலை 2024 ஆண்டினுள் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும், ரூபா 25,000 வீதம் ஒதுக்கப்பட்டிருந்த 04 நிர்மாண வேலைகளுக்காக அந்தத் தொகை போதியளவாக காணப்படாமையால் அந்தப் பணத்திலிருந்து குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு சிலிண்டர்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்குச் சொந்தமான மாவரல வாராந்த சந்தைக் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 429,829 இற்கான செலவு மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ரூபா 429,829 இற்கான வெட் செலவு 2024 ஆண்டின் போது நாட்குறிப்பு பதிவு இலக்கம் 02 இன் மூலம் மூலதனப்படுத்தப்பட்டது என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 355,742 தொகை பெறுமதியான 40 பொருட் பதிவேட்டுப் பண்ட விடயங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் சரி செய்யப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 28,171,334 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | எதிர் காலத்தில் நிலையான சொத்துக்கள் பதிவேடொன்றில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 258,746 இற்கான 34 வைப்பு மீதிகள் தொடர்பான நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட வைப்பு உரிமையாளர்கள் அறிவுறுத்தப்பட்டு வைப்புத் தொகையை திருப்பி செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையில் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 12,724,937 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த மீண்டுவரும் வருமானம் ரூபா 31,630,036 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 2,956,600 | 2,282,625 | 2,532,302 | 262,606 | 1,991,500 | 2,335,586 | 1,910,523 | 512,283 |
| ii. | வாடகை | 9,846,960 | 9,712,368 | 9,929,263 | 458,575 | 10,883,760 | 7,256,696 | 7,886,314 | 675,470 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 751,200 | 1,104,040 | 1,165,478 | 134,000 | 821,150 | 1,042,543 | 981,105 | 195,438 |
| iv. | ஏனைய வரு மானங்கள் | 7,445,650 | 11,037,144 | 10,991,448 | 788,511 | 4,421,200 | 6,682,253 | 6,141,871 | 742,815 |
| | | 21,000,410 | 24,136,177 | 24,618,491 | 1,643,692 | 18,117,610 | 17,317,078 | 16,919,813 | 2,126,006 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங்கண்டு இலக்கம் 2284 மற்றும் 2022 ஜூன் 10 திகதிய வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டு 1 ½ வருடம் மிகையான காலம் கடந்திருந்த போதிலும் ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2025 ஆண்டில் செயற்படுத்தக்கூடியவாறு வீதவரி பெறுமதி மதிப்பீடு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 07 வர்த்தக கட்டிடத் தொகுதிகளில் 93 கடையறைகளில் 91 வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் 23 கடையறைகளில் இருந்து ரூபா 456,075 இற்கான கடை வாடகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. அவற்றில் ரூபா 5,000 இற்கு மிகையான மீதிகளின் பெறுமதி ரூபா 448,560 தொகையாக காணப்பட்டது. | 03 கடையறைகளின் உரிமையாளர்களிடம் ரூபா 336,287 தொகையும், 03 கடையறைகளில் இருந்து ரூபா 6,837 தொகையும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டதெனவும் குறிப்பிட்ட வாடகையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஊறுபொக்க வர்த்தக கட்டிட தொகுதியில் 03 கடையறைகளுக்கான கடை வாடகை 22 மாதங்களுக்கும் 24 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலம் முதல் வாடகை செலுத்தல் நிறுத்தியிருந்தமையால் ரூபா 336,287 இற்கான மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | வாடகை செலுத்துவதை புறக்கணித்துள்ள ஒரு வாடகையாளருக்கு சொந்தமான 03 கடையறைகளுக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் தபபா/பபாகோ/2010/01 மற்றும் 2010 திசெம்பர் 27 திகதிய சுற்றறிக்கையின் 05 ஆவது பந்திக்கு இணங்க சபைக்கு சொந்தமான 22 கடையறைகளின் உடன்படிக்கைகளை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் கால வரையறையை மிகைத்து 01 வருடங்களும் 06 மாதங்களும் கடந்திருந்தது. அதேபோல், மேற்கூறிய சுற்றறிக்கையின் 11 ஆவது பந்தியின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக சபைக்கு சொந்தமான 02 வர்த்தக கட்டிடத் தொகுதிகளில் 22 கடையறைகளை வாடகைக்கு எடுத்திருந்த வாடகையாளர்களினால் கூடிய தொகையொன்றுக்கு வேறு தரப்பினருக்கு துணை வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | புதிய பெறுமதி மதிப்பீட்டு வாடகைக்கு இணங்கியிருக்காமையால் புதிய உடன்படிக்கையொன்று மேற்கொள்வதற்கு வாடகையாளர்கள் விருப்பமின்மை தெரிவித்திருந்தமையால் வாடகை உடன்படிக்கையை நாளதுவரை ஆக்குவதற்கு முடியாமல் இருந்ததெனவும், மற்றும் வர்த்தகத் தொடர் கட்டிடத் தொகுதிகள் நிர்மாணிக்கும் போது முற்கொடுப்பனவு அடிப்படையில் டென்டர் முறையில் கடையறைகள் வாடகைக்கு கொடுக்கப்படுகின்றமையால், வசதி படைத்த வர்த்தகர்களினால் டென்டர் சமர்ப்பித்து மேலதிக வருமானம் ஒன்று உழைப்பதற்காக கடையறைகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றதெனவும், அவர்களினால் மாதாந்த தவணைப் பணம் செலுத்தப்பட்டிருந்தமையால் சபைக்கு நட்டமேதும் ஏற்பட்டிருக்கவில்லை என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 986,119 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 17,389,714 தொகையாகக் காணப்பட்டது. | நீதிமன்றத் தண்டப்பணத்தில் ரூபா 982,119 தொகை மற்றும் முத்திரைக் கட்டணத்தில் ரூபா 12,488,881 தொகை 2024 ஏப்ரல் 24 அளவில் கிடைத்திருந்தெனவும், மீதியான ரூபா 4,000 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் நீண்ட காலமாக நிலுவையாக காணப்படும் முத்திரைக் கட்டணப் பெறுமதி எதிர் காலத்தில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126 இற்கு இணங்க சபையின் அதிகார பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாண வேலைக்காக கட்டிட வரைபுகள் அங்கீகரித்தல் மற்றும் காணி துணைப் பகிர்வு மேற்கொள்ளல் தொடர்பாக அனுமதிப்பத்திரங்கள் வழங்குவது தொடர்பான ஏற்பாடுகள் அடங்கிய துணை சட்டங்கள் ஆக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் பொதுவாக தயாரிக்கப்பட்ட உள்ளூராட்சி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள துணைச் சட்டங்கள் கிடைத்தவுடன் சபைக்கு பொருந்தக்கூடியவாறு துணைச் சட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட்டு துணைச் சட்டங்களை விரைவாக ஆக்கிக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் உக்கக் கூடிய குப்பைகளை பொரலம்பொத ¼ ஏக்கர் அளவான காணியில் அகற்றப்பட்டு சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதிலும், சேதனப் பசளை செயற்களத்தில் வசதிகள் போதாமை, மறைக்கப்பட்ட கட்டிடமொன்று காணப்படாமையால் சேதனப் பசளை உற்பத்தி வினைத்திறனுடன் மேற்கொள்ளவில்லை என அவதானிக்கப்பட்டது. சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்காத குப்பைகளை அகற்றுவதற்காக சபையினால் முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்படாமல் சேதனப் பசளை செயற்களம் அமைந்துள்ள வளாகத்தில் அகற்றப்பட்டு மண்ணினால் மூடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சேதனப் பசளை உற்பத்திக்காக கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்று அதற்கான மதிப்பீடு மற்றும் வரைபு தயாரிப்பதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும், எரித்தல் அல்லது புதைத்தல் தவிர உக்காத குப்பைகளை மீள்சுழற்சி செய்வதற்கு மாற்று வழியொன்று கிடைத்திருக்காமையால் குப்பை முகாமைத்துவத்திற்காக காணியொன்று பெற்றுத் தரும் படி பிரதேச செயலகத்தை கேட்டுள்ளது என. | முறையான குப்பை முகாமைத்துவச் செயற்திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையினால் செயற்படுத்துகின்ற சேதனப் பசளை செயற்திட்டத்திற்காக 2024 ஜனவரி 22 திகதி அளவிலும் மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்று பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையினால் குப்பை முகாமைத்துவ அலுவல்கள் மற்றும் சேதனப் பசளை உற்பத்தி அலுவல்களுக்காக பயன்படுத்தும் காணி உரிமை சபைக்குச் சொந்தமாக காணப்படாமையால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்திற்காக விண்ணப்பிக்க முடியாமலிருந்தது என. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தல் 16 பிரிவுகள் தொடர்பாக 515 பாதைகளின் நில அளவை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த பாதைகளின் வரைபுகள் தயாரிக்கும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், 1987 இன் 15 இலக்க பிரதேச அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 24(1) இற்கு இணங்க 2001 ஆண்டின் பின்னர் பாதைப் பெயர் பட்டியல் வர்த்தானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஜனவரி 19 திகதி அளவில் 16 பிரிவுகளுக்குரிய 661 பாதைகள் பிரகடனம் செய்யப்பட்டு 2024 மார்ச் 05 திகதி அளவில் பாதை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டதெனவும், பாதை வரைபுகள் தயாரித்தல் 2024 ஜூன் 30 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி கட்டளை / பிரமாணங்கள் அடங்கிய 2021 ஜூலை 08 திகதிய இலக்கம் 2235/54 கொண்ட வர்த்தமான அறிவித்தலின் பிரிவு 28(1) ஏற்பாடுகளுக்கு புறம்பாக அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளாமல் சபையின் அதிகார பிரதேசத்தில் நகர்சார் எல்லைக்கு அடங்கிய ஊறுபொக்க கின்னலிய பாதையில் தெமடவலஹேன எனும் இடத்தில் கட்டிட எல்லையை மீறி 168.67 சதுர மீற்றர் அளவான இரண்டு மாடி | 50 அடி வரையறை காணப்படாமையால் உரிய நிபந்தனைகளுக்கு இணங்க வரைபினை திருத்தி மீண்டும் சமர்ப்பிக்கும் படி விண்ணப்பதாரிக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அவரினால் வரைபினை திருத்தி இதுவரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என. | பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வர்த்தகக் கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், மேலும், அது தவிர நிர்மாணிக்கப்பட்டிருந்த 02 புதிய கட்டிடங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | பஸ்கொட – ஊறுபொக்க பிரதான பாதையின் மத்தியிலிருந்து 50 அடிகள் பாதை காப்புப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வதிவிட மற்றும் வாணிப கட்டிடம் தொடர்பாக விண்ணப்பப்பத்திரங்களுக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நட்டஈடு இன்றிய உடன்படிக்கையொன்றை அனுகும் படி அறிவித்திருந்த போதிலும், அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கட்டிட வரைபின் படி தரை மாடியின் அளவு 200.37 சதுர மீற்றராக இருந்த போதிலும் அந்த வரைபுக்கு இணக்கமின்றி 214.5 சதுர மீற்றரிற்கான தரை மாடி நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | நட்டஈடு இன்றிய உடன்படிக்கையின் கீழ் குறிப்பிட்ட கட்டிடத்தின் விண்ணப்பத்தை அங்கீகரிப்பதற்காக எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும். தரைமாடியில் வித்தியாசப்பட்ட சதுர அளவுகளுக்காக புதிய வரைபொன்று சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் தண்டத் தொகையொன்று அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | சபையின் அதிகார பிரதேசத்தினுள் 2016 முதல் 2019 வரையான காலப் பகுதியில் 39 கட்டிட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவில் கட்டிட அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு 04 வருடங்களுக்ம் 07 இற்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அவற்றில் 05 கட்டிடங்களுக்கு மாத்திரம் இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அவை அங்கீகரிக்கப்பட்ட கட்டிட விண்ணப்ப எண்ணிக்கையில் 12 சதவீதம் ஆகும். | இணக்கச் சான்றிதழ்கள் வழங்கக்கூடிய மட்டத்தில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத காரணத்தினால் இணக்கச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளும் ஆட்கள் குறைவடைந்திருந்தது எனவும், இணக்கம் பெற்றுக்கொள்வதற்காக முன்வருவோரின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிர்மாண வேலைகளுக்குரிய இணக்கச் சான்றுகள் பெற்றுக்கொள்ள வேண்டும். |

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த மாநாட்டில் பங்குபற்றுவதற்காக 06 உத்தியோகத்தர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதிகள் வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 76,200 தொகை எதுவித சட்ட ஏற்பாடுகளும் மேற்கொண்டிருக்காத போதிலும், வெளித்தரப்பினர் ஒருவருக்கு சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | தாபனக் கோவையின் 25 ஆவது அத்தியாயத்தில் 2 ஆவது பிரிவிற்கு மற்றும் 05 ஏனைய நிபந்தனைகளின் கீழ் மேற்கூறிய மாநாட்டில் பங்குபற்றுவதற்காக இலவச போக்குவரத்து வசதிகளுக்கு சமமான தொகையொன்று தனியார் பஸ் வண்டிகளுக்காக வழங்குவதற்கு தென் மாகாண ஆளுனரினால் வழங்கியிருந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது என. | தாபனக் கோவை, நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஏப்ரல் 25 திகதி முதல் 2023 நவம்பர் 16 திகதி வரையான காலப் பகுதியில் சபையினால் ரூபா 760,055 இற்கான பெறுமதிக்கான 18 பெறுகைக் குழுத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்ததுடன், அந்தத் தீர்மானங்களுடன் தொடர்பான அறிக்கைகள் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 6.3.6 இற்கு இணங்க பெறுகைக் குழு அங்கத்தவர்களினால் கையொப்பமிடப்பட்டு பேணிச் சென்றிருக்கவில்லை. | எதிர் காலத்தில் பெறுகை தீர்மானப் பதிவேட்டில் உத்தியோகத்தர்களின் கையொப்பத்துடன் தீர்மானங்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வழி காட்டலுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 271,768 தொகை செலவிடப்பட்டு 225/75/16PR இனத்தைச் சேர்ந்த 04 டயர்கள் கொள்வனவு செய்வதற்காக விலைகூறல்கள் அனுப்பப்பட்டிருந்த 05 பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் 02 பேர்களிடம் மாத்திரம் கூறுவிலைகள் கிடைக்கப்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய தகவல்கள் ஏதும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | டயர்கள் கொள்வனவு செய்தல் தொடர்பான கோவை காணாமல் போயுள்ளது எனவும், எதிர் காலத்தில் இவ்வாறான தாமதங்களை தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் படி விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதென. | பெறுகை அலுவல்கள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.6 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலை வெளிக்கள தொழிலாளர் மூவருக்கு மற்றும் பிரதியீட்டு சுகாதார தொழிலாளர் ஒருவருக்கு பதவிக்குரிய கடமைகளுக்கு பதிலாக ஏனைய கடமைகள் சாட்டப்பட்டு சம்பளங்கள் மற்றும் படிகளாக ரூபா 1,854,315 தொகை சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | சேவையின் தேவைப்பட்டின் மீது சாரதிப் பதவி மற்றும் கனரக இயந்திர இயக்குனர் பதவிக்காகவும், பெங்கமுவ உப அலுவலகத்தின் உதவி அலுவல்களுக்காகவும் வேலை / வெளிக்கள தொழிலாளர்கள் மூவர் ஈடுபடுத்தப்பட்டு பேணிச் செல்லப்பட்டதெனவும், அவர்களுக்கு சாட்டப்பட்ட பதவிக்குரிய கடமைகள் சிறந்த முறையில் நிறைவேற்றப்பட்டமையால் அவர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதென. | பதவிகளுக்குரிய கடமைகள் சாட்டப்பட வேண்டும். |
| (ஆ) | நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்ட இறந்த மற்றும் ஓய்வு பெற்ற இரண்டு ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த கூட்டுத்தொகை ரூபா 152,611 இற்கான இடர் கடன் மீதியொன்று காணப்பட்டது. | இறந்த உத்தியோகத்தரின் ரூபா 9,663 இற்கான கடன் தொகை பதிவழிப்பதற்காக ஆளுனரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டதெனவும், ஓய்வுபெற்ற ஊழியரின் ரூபா 142,948 இற்கான கடன் தொடர்பாக நி.பி. 104 விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்வதற்காக எழுத்துமூலம் அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | அறவிடப்படாமல் காணப்படும் ஊழியர் கடன் மீதிகளை விரைவாக அறவீடு செய்ய வேண்டும். |